©
தமிழ்நாடு அரசு
2008



# நிதி (ஊதியப் பிரிவு)த் துறை

அரசு ஆணை நிலை எண். **391**, நாள் :15—9—2008

*(ஆவணி–30. திருவள்ளுவராண்டு, 2039)*

**சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை –** புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் மூன்றாவது திட்டம் – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் (பொது) ஆகிய திட்டங்களில் தொகுப்பூதியத்தில் பணியாற்றும் அங்கன்வாடி உதவியாளர்கள், நிலை–I / சத்துணவு சமையலர்கள், அங்கன்வாடி உதவியாளர்கள் நிலை–II / சமையல் உதவியாளர்கள், குறு அங்கன்வாடி பணியாளர்களுக்கு சிறப்பு கால முறை ஊதியம், ஊதிய உயர்வு மற்றும் சிறப்பு ஓய்வூதியம் அளித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பின்வருவனவற்றைப் படிக்கவும் :–

1. அரசு ஆணை நிலை எண்: 70, சமூக நலம் (ம) சத்துணவுத் திட்ட துறை, நாள்:23–4–98.
2. அரசு ஆணை நிலை எண்: 62, சமூக நலம் (ம) சத்துணவுத் திட்ட துறை, நாள்:28–4–05.
3. அரசு ஆணை நிலை எண்: 136, சமூக நலம் (ம) சத்துணவுத் திட்ட துறை, நாள்:19–9–06.
4. அரசு ஆணை எண்: 186, சமூக நலம் (ம) சத்துணவுத் திட்ட துறை, நாள்:04–10–07.
5. 15–8–2008 அன்று நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில் சத்துணவுப் பணியாளர்கள் நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புகள்.

– – – – – –

**<u>ஆணை:</u>**

15--8--2008 அன்று நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில் சத்துணவுப் பணியாளர்கள் நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்கண்ட அறிவிப்புகள் வெளியிடப்பட்டது:

(அ) தொகுப்பூதியத்தில் உள்ள அங்கன்வாடி உதவியாளர்கள், சத்துணவு சமையலர்கள் மற்றும் சமையல் உதவியாளர்கள் ஆகிய அனைவருக்கும் தனியான ஒரு காலமுறை ஊதிய விகிதம் (Special Time Scale of Pay) நிர்ணயிக்கப்படும்;

(ஆ) சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களாக 25 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரிந்து வருவோரும், தற்போது பணியில் சேர்ந்தோரும், ஒரே ஊதியம் பெறும் நிலை உள்ளதால் பணிமூப்பு அடிப்படையில் பணியில் மூத்தோருக்கு ஊதிய உயர்வு ஏற்படும் வகையில் பத்தாண்டு காலத்திற்கு ஒரு ஊதிய உயர்வு வழங்கப்படும்;

/த.பி.பா./

(இ) மேற்கூறிய சிறப்புப் பணியாளர்களுக்கு ஓய்வுபெற்ற பின்னரும் அவர்களது வாழ்வாதாரத்திற்கு வழிசெய்யும் வகையில் இவர்களுக்கு சிறப்பு ஓய்வூதியம் (Special Pension) அளிக்கப்படும்.

2. மேற்காணும் அறிவிப்புகளின் அடிப்படையில் கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

(அ) மாதம் ஒன்றுக்கு ரூ.1,040/– தொகுப்பூதியம் பெற்று வரும் அங்கன்வாடி உதவியாளர்கள் நிலை–**2** மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியவிகிதமாக (Special Time Scale of pay) ரூ.500--10--600--20—800 நிர்ணயிக்கப்படுகிறது.

(ஆ) மாதம் ஒன்றுக்கு ரூ.1,380/- தொகுப்பூதியம் பெற்று வரும் அங்கன்வாடி உதவியாளர்கள் நிலை–**1** / சத்துணவு சமையலர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியவிகிதமாக (Special Time Scale of Pay) ரூ.660--15—810—20--1010 நிர்ணயிக்கப்படுகிறது.

(இ) இவர்களைத் தவிர, சமீபகாலத்தில் புதிதாக பணியமர்த்தப்பட்டு மாதம் ஒன்றுக்கு தொகுப்பூதியமாக ரூ.2,070/- பெற்றுவரும் குறு அங்கன்வாடி பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியவிகிதமாக ரூ.975—15—1125—20—1325 நிர்ணயிக்கப்படுகிறது.

**3.** புரட்சித் தலைவர் எம்ஜிஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் பணிபுரியும் சத்துணவு அமைப்பாளர்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் (பொது மற்றும் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்) திட்டத்தில் பணியாற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் ஆகியோர் ரூ.1300--20--1500--25--2000 என்ற சிறப்பு காலமுறை ஊதியம் பெற்று வருகின்றனர். இவர்களில் **25** ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வருவோரும் தற்போது பணியில் சேர்ந்தோரும் ஒரே ஊதியம் பெறும் நிலை உள்ளதனைக் கருத்தில் கொண்டு பணி மூப்பு அடிப்படையில் பணியில் மூத்தவர்களுக்கு ஊதிய உயர்வு ஏற்படும் வகையில் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பத்தாண்டு பணிக்காலம் முடித்தவர்களுக்கு ஒரு ஊதிய உயர்வு வீதம் அளித்து ஆணையிடப்படுகிறது.

**4.** மேற்கூறிய சிறப்பு பணியாளர்கள் அனைவரும் ஓய்வு பெற்ற பின்னரும் அவர்களது வாழ்வாதாரத்திற்கு வழி செய்யும் வகையில் கீழ்க்கண்டவாறு சிறப்பு ஓய்வூதியம் நிர்ணயித்து ஆணையிடப்படுகிறது.

(அ) அங்கன்வாடி உதவியாளர்கள் நிலை–**2** / சமையல் உதவியாளர்கள் ஆகியோருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500/–,

(ஆ) அங்கன்வாடி உதவியாளர்கள் நிலை–**1** / சமையலர்கள் ஆகியோருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.**600/–** மற்றும்

(இ) சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் குறு அங்கன்வாடி பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.700/-.

இச்சிறப்பு ஓய்வூதியமானது, இவ்வாணை வெளியிடப்படும் நாள்முதல் பணியிலிருந்து ஓய்வு பெறும் சத்துணவுப் பணியாளர்களுக்கு அவர்கள் பணி ஓய்வு பெறும்போது அளிக்கப்படும் சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக்கொடையாக அளிக்கப்படும் தொகை (Special Provident Fund-cum-Gratuity) மற்றும் ஒட்டு மொத்த தொகையாக அளிக்கப்படும் ரூ.**50,000/–** மற்றும் ரூ.**20,000/–** தவிர கூடுதலாக தனியே வழங்கப்படும்.

…./ **3** /

**5. இச்சத்துணவுப் பணியாளர்களுக்கு மேலே பத்தி-2-ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள சிறப்பு காலமுறை ஊதிய விகிதத்தினைத் தொடர்ந்து மத்திய அரசின் ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் மேலான அலுவலர் குழுவின் பரிந்துரைகளின்படி மீண்டும் ஒருமுறை திருத்திய ஊதிய விகிதம் உயர்த்தி நிர்ணயிக்கப்படும்.**

6. மேலே பத்தி-2 மற்றும் பத்தி-3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட திட்டங்களுக்கான செலவினம் சம்பந்தப்பட்ட திட்டக் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும். இது தொடர்பான மேல் நடவடிக்கை உரிய நேரத்தில் தவறாமல் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. மேலே பத்தி-4-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை கோரிக்கை எண் 45-இல் புதிதாக துவக்கப்படவுள்ள கீழ்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படலாம்.

> ''2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் - 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் - 102 சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் - I. திட்டத்தில் சேராதது. AP ஓய்வு பெற்ற சத்துணவுப் பணியாளர்களுக்கு வாழ்வாதார உதவிக்கான சிறப்பு ஓய்வூதியம். - 27. ஓய்வூதியங்கள் - 05. சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள்.''
> [ த.தொகு. 2235. 60. 102. AP 2754 ]

8. மேற்காணும் புதிய கணக்குத் தலைப்பிற்கு திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் மூன்றாவது திட்டம், சென்னை-113 மதிப்பீட்டு கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரி ஆவார். சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்/ கருவூல அலுவலர் மேற்கண்ட புதிய கணக்கு தலைப்பினை தங்களது கணக்குகளில் தொடங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. மேலே பத்தி நான்கில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப் பணித் (New Service) திட்டமாகும். இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்ற பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று மேற்கொள்ளப்படும். இதற்கான முன் பணம் ஒப்பளிப்பு செய்ய உரிய படிவத்தில் இவ்வரசாணையுடன் நிதி (வ.செ.பொ.1) துறைக்கு விண்ணப்பிக்க திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் மூன்றாவது திட்டம், சென்னை-113 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2008-09-க்கான முதல் துணை மானியக் கோரிக்கையில் (First Supplementary Estimates) சேர்க்கும் பொருட்டு உரிய செயற்குறிப்புகளை அரசின் நிதித்துறைக்கு தகுந்த நேரத்தில் தவறாமல் அனுப்புமாறும் அவர் அறிவுறுத்தப்படுகிறார்.

/த.பி.பா./

10. இவ்வாணைகள் அனைத்தும் பேரறிஞர் அண்ணா அவர்கள் நூற்றாண்டு கொண்டாடப்படும் நாளான 15 செப்டம்பர், 2008 முதல் நடைமுறைப் படுத்தப்படும்.

11. இவ்வாணை கூடுதல் நிதி ஒதுக்கப்பேரேடு எண்: 796 (எழுநூற்று தொன்னூற்று ஆறு) உடன் வெளியிடப்படுகின்றது.


(ஆளுநரின் ஆணைப்படி)

**கு. ஞானதேசிகன்,**
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மை செயலாளர், சமூகநலம் மற்றும் சத்துணவு திட்ட துறை, சென்னை–9.
சமூக நலத்துறை இயக்குநர், சென்னை–5.
ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை இயக்குநர், சென்னை–15.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.
திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் மூன்றாவது திட்டம், சென்னை – 113.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
ஆணையர், கருவூலம் (ம) கணக்குத் துறை, சென்னை–15.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 5 / 35 / 79 / 9 மற்றும் மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் / துணை கருவூல அலுவலர்கள்.
தலைமை அரசுத் துறைநிறுவனத் தணிக்கையாளர், சென்னை–2.
ஓய்வூதிய இயக்குநர், 3–வது பிளாக், டி.எம்.எஸ். வளாகம், தேனாம்பேட்டை, சென்னை–6.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18 / 35 (பெயரில்).

**நகல்:**
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
நிதித்துறை அமைச்சரின் கூடுதல் செயலாளர், சென்னை–9.
தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை–9.
நிதித்துறை முதன்மை செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
நிதி (ச.ந. / வ.செ 1& 2) த்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /



பிரிவு அலுவலர்.